## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வுக் காலப்பகுதியின் போது மற்றும் 2015 ஒக்தோபர் 15 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 ஒக்தோபர் 15 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 21.00 | 2,399.25 | 773 | 4.63 | 617.83 | 20.68 | 2இ509.95 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 9 | - | 8.60 | - | 20.17 |
| **மொத்தம்** | **21.00** | **2 ,399.25** | **782** | **4.63** | **626.43** | **20.68** | **2இ530.12** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வடக்கு மாகாணத்தில் மாகாண வீதிகளின் அண்ணளவாக 100 கிலோமீற்றர்கள் புனரமைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 60.64 கிலோமீற்றர்கள் நீளமுடைய 12 மாகாண வீதிகளின் புனரமைப்பிற்கு செயற்திட்டத்தினால் 04 ஒப்பந்தப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தது. 02 பொதிகளின் கீழ் 23.07 கிலோமீற்றர்கள் நீளமான 06 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2013 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு 150 நாட்கள் தொடக்கம் 174 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதங்களுடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஏனைய 02 பொதிகளின் கீழ் மாகாண வீதிகளின் புனரமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் 2012 இல் இடைநிறுத்தப்பட்டு 2013 இல் வேறு ஒப்பந்தகாரர்களிற்கு மீள வழங்கப்பட்டவை 2015 மார்ச் 15 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதி – 01 இன் கீழ் வீதிப் புனரமைப்பு வேலைகளுடன் தொடர்புடைய ஒப்பந்தகாரர் 123 நாட்கள் கால நீடிப்பிற்காக ரூபா 6.7 மில்லியன் தொகையான பிணக்குத்தீர்த்தல் கோரிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தார். கிடைத்த தகவல்களின் பிரகாரம், கோரிக்கையை தீர்ப்பதற்கு செயற்திட்டத்தால் மீளாய்வுக் காலப்பகுதியின் போது ரூபா 15.18 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்துது. மேலும் ஏனைய 02 பொதிகளின் கீழ் வீதிப் புனரமைப்பு வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களால் செய்யப்பட்ட பிணக்குத்தீர்த்தல் கோரிக்கைகளுக்காக மீளாய்வுக் காலப்பகுதியின் போது ரூபா 2.62 மில்லியன் தொகை சட்டக் கட்டணங்களாக செலவிடப்பட்டுமிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தால் பொதி – 2 இன் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகள் செல்லுபடியான காரணங்களின்றி 132 நாட்கள் கால தாமதங்களுடன் வடக்கு மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் கையேற்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனையின் டி-43 ஆம் உட்பிரிவின் பிரகாரம், புனரமைக்கப்பட்ட வீதிகள் 07 நாட்களுக்குள் கையேற்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது.

(இ) வீதி வேலைகளின் நோக்கெல்லையின் முரண்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவையோ அல்லது ஆலோசகரையோ ஆலோசிக்காமல் செயற்திட்டப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையால் மூல மதிப்பீட்டின் 73 சதவீத வேலைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 12.34 மில்லியன் பெறுமதியான 3ஆர் பொதியின் கீழான உடுவில் – சண்டிலிப்பாய் வீதியின் மதகுகளின் புனரமைப்பு தொடர்பான வேலைகளின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தது. மேலும் மூல மதிப்பீட்டின் 44 சதவீத வேலைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 10.38 மில்லியன் பெறுமதியான 5ஆர் பொதியின் கீழான மண்டைதீவு வீதியின் தற்காப்புச் சுவர்களின் நிர்மாண வேலைகள் செயற்திட்டப் பணிப்பாளரின் அனுமதியுடன் குறைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 மே 15 இல் கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட தள விஜயங்களின் போது 2013 ஒக்தோபர் மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளின் கோண்டாவில் – இருபாலை வீதி மற்றும் திருநெல்வேலி – புத்தூர் வீதிகளின் வீதி மேற்பரப்புக்களின் பல இடங்களில் வெடிப்புக்கள் இருந்தமை வெளிப்பட்டிருந்தது. ஆகையால் வீதிப் புனரமைப்பு வேலைகளின் தரக் குறைபாடுகள் தொடர்பான சான்றினை இது வழங்கியது.

### 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

2015 மார்ச் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் மற்றும் நிறைவேற்று முகவரினால் இருப்பு பொருட்களை கையளிப்பதற்கும் 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு கணக்குகள் முடிவுறுத்தப்பட்டு செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.